நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

## C.C. No. 113/2025

## P.W. 1 –ன் வாக்குமூலம்

**(அரசுதரப்பு சாட்சி )**

............

| | | |
|---|---|---|
| பெயர் | : | பழனியம்மாள் |
| தந்தை / கணவர் பெயர் | : | பண்ணாடி |
| கிராமம் | : | நொளச்சிவளைவு, நங்கவள்ளி |
| வட்டம் | : | மேட்டூர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | **PW 1** |
| வயது | : | 50 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2025–ஆம் வருடம், ஜுன் மாதம், 17–ம்ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**எதிரி ஆஜர் அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:– 02.55PM.)

1. நான் தற்போது நொளச்சி வளைவில் குடியிருக்கிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். 5 வருடங்களுக்கு முன்பு மாலை 5 மணி அளவில் ஏழுமலை என்பவர் எங்கள் வீட்டிற்கு வந்து என்னுடைய மகன் எங்கே என்று கேட்டார். எனக்கு தெரியாது என்று சொன்னேன். எதற்காக எனது மகனை

தேடுகீறிர்கள் என்று கேட்டேன். அப்போது எனது மகன் பைக்கில் இருந்து இறங்கி வீட்டிற்கு வந்தார். நான்கு எதிரிகளும் என்னுடைய முடியை பிடித்து இழுத்து கீழே தள்ளி காலால் உதைத்தார்கள் மகாதேவன் என்பவர் என்னை விறகு கட்டையால் வலது தோள்பட்டையில் அடித்தார்.

2. எதிரிகள் கோபி, வெங்கடேஷ் ஆகியோர் எனது மகனை கைகளால் அடித்தார்கள். என்னை கொன்று விடுவதாக மிரட்டினார்கள். வலி தாங்க முடியாமல் நான் மேட்டுர் அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்ந்தேன். போலீசார் என்னை விசாரித்து கைரேகை பெற்றுக் கொண்டார்கள் . என்னிடம் புகார் வாக்குமூலத்தில் உள்ள கைரேகை என்னுடையதுதான். அதில் உள்ள விவரம் எனக்கு தெரியும். (**புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) போலீசார் என்னை விசாரித்தனர்.

எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் தரப்பில் ஆஜரில் இருந்தும் உரிய வாய்ப்பு அளிக்கபட்டும் குறுக்குவிசாரணை செய்யப்படவில்லை.

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:–03.04PM.

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/–நா.கோபாலகிருஷ்ணன்,**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**

நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

## C.C. No. 113/2025

## P.W. 2 –ன் வாக்குமூலம்

**(அரசுதரப்பு சாட்சி )**

............

| | | |
|---|---|---|
| பெயர் | : | பண்ணாடி |
| தந்தை / கணவர் பெயர் | : | குட்டியப்பன் |
| கிராமம் | : | ஊமாண்டிவளைவு |
| வட்டம் | : | மேட்டூர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | **PW 2** |
| வயது | : | 55 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2025–ஆம் வருடம், ஜுன் மாதம், 17–ம்ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**எதிரிகள் ஆஜர் அவர்களது வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:– 03.01PM.)

1. நான்ஊமாண்டி வளவில் குடியிருந்து வருகிறேன். நான் மளிகை கடை நடத்தி வந்தேன் தற்போது கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1 என்னுடைய மனைவி. சுமார் 4 வருடங்களுக்கு முன்பு மாலை 5 மணி அளவில் ஆஜர் எதிரகளும் எனது மகனும் முனியப்பன் கோவில் அருகே பேசிக்

கொண்டிருந்தபோது வாய் தகராறு ஏற்பட்டு சமாதானம் செய்து அனுப்பி வைத்தாக கேள்விபட்டேன் அன்று மாலை எதிரிகள் எனது வீட்டிற்கு வந்து எனது மகன் எங்கே என்று கேட்டுள்ளார்கள். எதற்காக எனது மகனை கேட்கிறீர்கள் என் மனைவி கேட்டதற்கு எதிரிகள் என் மனைவியை கீழே தள்ளி அடித்து விறகு கட்டையால் அடித்தாக என் மனைவி என்னிடம் சொன்னார். என் மனைவியை நான் மேட்டுர் அரசு மருத்துவமனையில் நான்தான் சிகிச்சையில் சேர்த்தேன். என் மனைவியை நான்கு பேர்கள் அடித்தார்கள். மூன்று எதிரிகள் இந்த நீதிமன்றத்தில் ஆஜர் ஒருவர் இல்லை. போலீசார் என்னை விசாரித்தனர்.

2. எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் தரப்பில் ஆஜரில் இருந்தும் உரிய வாய்ப்பு அளிக்கபட்டும் குறுக்குவிசாரணை செய்யப்படவில்லை.

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:–03.15PM.

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஓம்/–நா.கோபாலகிருஷ்ணன்,**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**